**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.,B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19-ம் நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண்.01/2025**
**இன்**
**அ.வ.எண்.33/2022**

1.முத்து இருளப்பன்
2.தில்லைநம்பு ....மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1.காந்தி
2.அனுசியா(இறப்பு)
3.குருநாதன்
4.கனகராஜ் .....1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

5.ராணி
6.ராசாத்தி
7.ராதா(இறப்பு)
8.மணிகண்ட பெருமாள்
9.மைனர்.ஜீவசக்தி .......5 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 5 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 08.01.2026-ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிககள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.சத்தியராஜ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சரவணன் அவர்கள் ஆஜராகி ஏதிருரை ஏதும் சமர்ப்பிக்காததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், சிபிசி கட்டளை 22 விதி 4ன் கீழ் இறந்துபோன 2ம் பிரதிவாதியின் வாரிசுகான 5 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை அசல் வழக்கில் சேர்த்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம் :-**

அசல் வழக்கான 33/2022-ல் 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கானது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த 18.04.2023ம் தேதியன்று 2ம் பிரதிவாதி காலமாகிவிட்டதால் 2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 5 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளில் ஒருவரான 7ம்எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்து விட்டதால் அவரது கணவர் மற்றும் மகள் 8, 9 எதிர்மனுதாரர்களாக இணைக்கப்பட்டுள்ளதாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2) <u>பிரச்சினை</u> :–

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :–

3) மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் 5, 6 எதிர்மனுதாரர்கள் மற்றும் இறந்துபோன 7ம் எதிர்மனுதாரர் ஆகியோர் 2ம் எதிர்மனுதாரர்களின் வாரிசுகள் என்பதும் அதில் 7ம் எதிர்மனுதாரர் இறந்துபோன காரணத்தினால் 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கில் இணைக்கப்படவேண்டுமென்பது இவ்வழக்கு விசாரணைக்கு அவசியமானதாக உள்ளது. 2ம் எதிர்மனுதாரரரின் வாரிசுகளான 5 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை சேர்ப்பதே நீதி பரிபாலனைக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, கட்டளை 22 விதி 4 கீழான மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தகுந்த திருத்தங்கள் மேற்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**கட்டளை 22 விதி 4 கீழ் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.01.19 17:55:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u> :-** **இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> :-** **இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u> :-** **இல்லை**

SUJITH Digitally signed by SUJITH Date: 2026.01.19 17:56:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
இ.ம.எண்.1/2025
இன்
அ.வ.எண்.33/2022
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:19.01.2026